**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

அசல் வழக்கு எண் 22/2021

வாதி தரப்பு சாட்சி – 3 சிவக்குமார் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 13.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 8 பிரதவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிகள் கேட்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரை மற்றும் வாதியின் முதல் விசாரணை வாக்குமூலத்தையோ பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்குரையில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்தால் அந்த தீர்ப்பு எனக்கு எந்த வகையிலும் பயன்படாது என்றால் சரிதான்.

2. வாதிகளை தவிர நடுப்பண்ணையைச் சேர்ந்தவர்கள் என்னையும் சேர்த்து அதிக நபர்கள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முக்கியஸ்தர்களை மட்டுமே தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள். மேற்படி விவரத்தை வாதிகள் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நடுப்பண்ணை கோவிலின் சர்வே எண் என்ன என்றால் புல எண்.301 ஆகும். மேற்படி இடம் அரசாங்க புறம்போக்கு இடம் என்றால் சரிதான். மேற்படி அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

3. மின் இணைப்பு உள்ளது. மேற்படி மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் பிச்சைக்கார கவுண்டன் மகன் ராஜ் என்பவர் பெயரில் உள்ளது. அவரும் நடுப்பண்ணையைச் சேர்ந்தவர் ஆவார். மேற்படி ராஜ் என்பவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் இறந்து எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் 1989 ல் இறந்தார். மேற்படி மின் இணைப்பு எந்த வருடத்தில் ராஜ் பெயரில் ஏற்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி மின் இணைப்பு ராஜ் பெயரில தனிப்பட்ட முறையில் இருந்தது

என்றும், கோவிலுக்காக பெறப்பட்டிருந்தால் அது கோவில் பெயரில் இருந்திருக்கும் என்றும், எனவே அது கோவிலுக்காக பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

4. கோவில் முக்கியஸ்தர் என்பதால் கோவிலுக்கு அவர் பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 மின் இணைப்பு இரசீது எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் 2021ம் வருடம் பெறப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் ராஜ் என்பவர் இறந்து சுமார் 40 வருடங்கள் கழித்து அவர் பெயரில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா நடுப்பண்ணை கோவிலுக்கு பூசாரியாக இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் வகையறா பூர்வீகமாக பூசாரியாக இருந்து வருகிறோம். எங்கள் பூர்வீகமாக பூசாரியாக இருந்திருந்தால் மேற்படி விவரத்தை வாதிகள் வழக்குரையில் சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல.

**1 முதல் 8 பிரதவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA

**Additional District Munsif,
Kulithalai.**